2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. மு.பெ. சாமிநாதன்: *பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படாததைக் கண்டித்து...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறையில் வந்து கேளுங்கள்.*

4. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.*

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பள்ளிக் கல்வி குறித்த இருபத்தொன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

VAIMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS

2005 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4-4-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஏ.எஸ். கண்ணன். 10 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: தலைவர் அவர்களே, தொழிலாளர், வேலைவாய்ப்பு, வனத் துறை, மாசு கட்டுப்பாடு வாரியம்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூற விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியின் வெற்றிக்குத் தொழிலாளர்கள் முக்கியப் பங்கு ஆற்றுகின்றார்கள் என்று அரசின் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகின்றது. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.